செ.வெ.எண்:25/2021 நாள்:13.07.2021

# செய்தி வெளியீடு

## திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்தார்.

திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.எஸ்.வினீத் இ.ஆ.ப., அவர்கள் இன்று ( 13.07.2021) திருப்பூர் வடக்கு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்தார்.

திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் முன்னிலையில் நல்லாறு ஆற்றில் அங்கேரிபாளையம் பொதுகழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் அருகே (Upstream of Angeripalayam CETP) 1 நீர் மாதிரியும், நொய்யல் ஆற்றின் காசிபாளையம் பொதுகழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அருகே (Upstream of Kasipalayam CETP) 1 நீர் மாதிரியும் மாசுக்கட்டுப்பாட்டு வாரிய அலுவலர்கள் மூலம் சேகரிக்கப்பட்டது. சேகரிக்கப்பட்ட நீர் மாதிரிகள் இரண்டும் சீல் வைக்கப்பட்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் ஆய்வகத்திற்கு பகுப்பாய்விற்காக கொண்டுவரப்பட்டது. இதனைத் தொடர்ந்து, திருப்பூர் வடக்கு மாசு கட்டுப்பாடு வாரிய அலுவலகத்தில் செயல்பட்டு வரும் ஆய்வகத்தில் பகுப்பாய்விற்காக பயன்படுத்தும் கருவிகளையும் பார்வையிட்டு பழுதடைந்த கருவிகளை உடனடியாக சரிசெய்ய அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். மேலும், ஆய்வகத்தின் தரத்தினை மேம்படுத்த தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆய்வகத்தின் துணை தலைமை விஞ்ஞான அலுவலர் மற்றும் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும் அறிவுரைகளை வழங்கினார்.

இந்த ஆய்வின் போது, திருப்பூர் வடக்கு மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் திரு.சரவணக்குமார், உதவி செயற்பொறியாளர், தலைமை விஞ்ஞான அலுவலர் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**